**முதன்மை தொழிலாளர் நீதிமன்றம், கோயமுத்தூர்**

முன்னிலை: திருமதி.A.P. லதா, பி.எஸ்.ஸி., பி.எல்.,
முதன்மை தலைமை தாங்கும் அதிகாரி,
முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

வெள்ளிக்கிழமை, 10 ம் நாள், ஏப்ரல் மாதம் 2026 ம் வருடம்.

தொழிற்தாவா எண்.71/2025

(CNR No.TNCB04-000166-2025)

நேதாஜி போக்குவரத்து தொழிலாளர்கள்
பாதுகாப்பு தொழிற்சங்கத்திற்காக அதன்
மாநில பொது செயாளர்
M.அன்புராஜ். ..... மனுதாரர்

~ எதிராக ~

நிர்வாகம்,

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,

கோவை கோட்டம் - I,

கோவை. ... எதிர்மனுதாரர்

இந்த வழக்கு கடந்த 08.04.2026 ம் தேதியன்று என் முன் இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.முரளிதரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திருமதி.K.கன்னிகா சங்கரேஸ்வரி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் மற்றும் வழக்கு கோப்புக்களை பரிசீலனை

செய்தும், இது நாள் வரையில் எனது பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும் :-

தீர்வம்

மனுதாரர் தொழிற்சங்கம் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு எதிராக தொழிற் தகராறு சட்டம் 1947 பிரிவு 2(K)ன் கீழ் கோவை தொழிலாளர் அலுவலர் முன்பாக ஒரு மனு தாக்கல் செய்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கோவை லிமிடெட்) கோவை என்ற நிர்வாகத்தில் பணிபுரியும் மனுதாரர் திரு.P.ராஜேஷ்குமார், ஓட்டுநர் (பணி எண்.C27483) என்பவருக்கு ஜுன் 2020 மாதம் விடுப்பு கணக்கில், சிறப்பு விடுப்பாக கருதி, பிடித்தம் செய்த 03 நாட்கள் ஈட்டிய விடுப்பினை திரும்ப மனுதாரரின் விடுப்பு கணக்கில் சேர்த்து வழங்க வேண்டுமென்று கோரியிருந்த மனுவானது தொழிற்தாவா விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது சமரசம் ஏற்படவில்லை என்பதால் 27.07.2023ம் தேதியில் சமரச அதிகாரி தனது சமரச முறிவு அறிக்கையை மாநில அரசுக்கு சமர்பித்தார். அதனை ஏற்றுக் கொண்ட தமிழக அரசு கீழ்கண்ட எழுவினாவிற்கு பதில் அளிக்க இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

G.O. (D) No.10 Labour and Employment (D-1)
Department, dated 06.01.2025.

<u>எழுவினா</u>

மனுதாரர் திரு.P.ராஜேஷ்குமார், ஓட்டுநர் (பணி எண்.C27483) என்பவருக்கு ஜுன் 2020 மாதம் விடுப்பு கணக்கில், சிறப்பு விடுப்பாக கருதி, பிடித்தம் செய்த 03 நாட்கள் ஈட்டிய விடுப்பினை திரும்ப மனுதாரரின் விடுப்பு

கணக்கில் சேர்த்து வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்".

2. மனுவின் சுருக்கம் :

மனுதாரர் சங்கம் தொழிற்சங்க சட்டப்படி பதிவு செய்யப்பட்டதும், எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு கட்சி சார்பற்ற அமைப்பாகும். மனுதாரர் சங்கம் தொழிலாளர் நலனையும், நிறுவன நலனையும் பாதுகாக்க உறுதிகொண்டு செயல்பட்டு வரும் ஒரு தொழிற்சங்க அமைப்பாகும். எதிர்மனுதாரர் நிறுவனம் தமிழக அரசால் ஏற்று நடத்தப்பட்டு வரும் ஒரு போக்குவரத்து நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் அரசு சார்ந்த நிறுவனமாக இருந்த போதிலும், தொழிலாளர்களின் நலனை பாதுகாக்க தவறியும், தொழிற்சங்கம் வேறுபாடுகளை மனதில் கொண்டு ஆளுங்கட்சி தொழிற்சங்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, மற்ற தொழிற்சங்க செயல்பாடுகளை நசுக்குவதை ஒரு பணியாக கொண்டு, ஆளும் கட்சி அல்லாத தொழிற்சங்க உறுப்பினர்களை நடவடிக்கை என்ற பெயரில் பல்வேறு தொந்தரவுகளை கொடுத்து செயல்பட்டு வருகிறது.

3. சங்க உறுப்பினர் திரு.P.ராஜேஷ்குமார் என்பவர் ஓட்டுநராக பணி செய்து வருகிறார். இந்த நிலையில் சங்க உறுப்பினர் திரு.P.ராஜேஷ்குமார் ஜுன் 2020 மாத சம்பளம் சிலிப்பில் 03 நாட்கள் சங்க உறுப்பினர் திரு.P.ராஜேஷ்குமார் சொந்த ஈட்டிய விடுப்பினை நிர்வாகம் அனுமதியின்றி எடுக்கப்பட்டு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது கண்டு அதிர்ச்சி அடைந்தார். மேலும், கொரோனா தொற்று நோய் காரணமாக தமிழக அரசானது தமிழகம் முழுவதும் ஊரடங்கு

பிறப்பித்திருந்தது. 01.06.2020 ம் தேதியில் தான் பேருந்துகள் இயங்க அரசு அனுமதியளித்தது என்றும், அதன்படி சங்க உறுப்பினர் திரு.ராஜேஷ்குமார் கிளை மேலாளர் அவர்களை மற்றும் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர் அவர்களை தொடர்பு கொண்டு அவர்கள் அறிவுரைப்படி சங்க உறுப்பினர் திரு.P.ராஜேஷ்குமார் என்பவருக்கு நிர்வாகம் பணி வழங்கப்பட்டு, சங்க உறுப்பினர் திரு.P.ராஜேஷ்குமார் பணிக்கு வர மறுக்கவில்லை. மேலும் சங்க உறுப்பினர் என்பவர் ஜுன் 2020 மாத சம்பளத்தில் 03 நாள் சங்க உறுப்பினர் சொந்த ஈட்டிய விடுப்பு கழிக்கப்பட்டதற்கு சங்க உறுப்பினர் எந்தவிதத்திலும் காரணமில்லை. சங்க உறுப்பினர் அனுமதியின்றியும், தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை மீறியும், (ஊரடங்கு காலத்தில்) சங்க உறுப்பினரின் சொந்த 03 நாள் ஈட்டிய விடுப்பினை கழித்து சம்பளம் வழங்கியதை ரத்து செய்தும், தமிழக அரசு பொக்குவரத்து கழகம் கோவை கோட்டத்தில் எவ்வித முறையான சுற்றறிக்கை எதுவும் போடாமல் சங்க உறுப்பினரிடம் பிடித்தம் செய்த 03 நாள் ஈட்டிய விடுப்பினை சிறப்பு விடுப்பாக கருதி, பிடித்தம் செய்த 03 நாள் ஈட்டிய விடுப்பினை திரும்ப சங்க உறுப்பினரின் விடுப்பு கணக்கில் சேர்த்து வழங்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

4. மனுதாரர் சங்கம் தனது சங்க உறுப்பினர் ஓட்டுநர் சங்க உறுப்பினரின் நியாயமான கோரிக்கையை வலியுறுத்தி தொழிற்தகராறுகள் சட்டம் பிரிவு 2(கே)ன் கீழ் ஒரு கோரிக்கை மனுவினை தொழிலாளர் அலுவலர் கோவை முன்பாக சமர்ப்பித்தது. அந்த மனு ந.க.எண்.503/2020 என்ற எண்ணாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையில் கலந்து கொண்ட எதிர்மனுமாரர், சங்க

உறுப்பினர் கோரிக்கை குறித்து நேரடியாக பதில் சமர்ப்பிக்காமல் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கூறியிருந்தது. அதில் ஆகவே, அரசாணைப்படி கோரிக்கை முழுமையாக அனுமதிக்கப்பட வேண்டும். மேலும் இதற்கு எதிர்மனுதாரரின் தொழிற்சங்க பாகுபாடு காரணமான சட்டவிரோத நடவடிக்கையே காரணம் என்றும், எதிர்மனுதாரரின் சட்ட விரோத நடவடிக்கையினை இந்நீதிமன்றம் உத்தரவின் மூலமே தடை செய்ய முடியும் என்பதால் சங்க உறுப்பினரின் மனுவினை ஏற்று திரு.P.ராஜேஷ்குமார், ஓட்டுநர் (பணி எண்.C27483) என்பவருக்கு ஜுன் 2020 மாதம் விடுப்பு கணக்கில், சிறப்பு விடுப்பாக கருதி, பிடித்தம் செய்த 03 நாட்கள் ஈட்டிய விடுப்பினை திரும்ப அவரின் விடுப்பு கணக்கில் சேர்த்து வழங்க வேண்டுமென்றும், மேற்படி நாட்களுக்கு சம்பளம் மற்றும் இதர சலுகைகள் வழங்கி உத்தரவு பிறப்பிக்குமாறும், இந்த கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம் :

மனு சட்டபடி நிலைக்கத்தக்கதல்ல. சங்க உறுப்பினர் திரு.P.ராஜேஷ்குமார், ப.எண்.C27483) என்பவர் 05.09.2015 முதல் பணியில் சேர்ந்து உக்கடம்-1 கிளையில் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறார். சங்க உறுப்பினர் எதிர்மனுதாரர் நிர்வாகம் கடந்த ஜுன் 2020 மாதம் விடுப்பு கணக்கில் இருந்து எடுக்கப்பட்ட 03 நாட்கள் ஈட்டிய விடுப்பை எதிர்மனுதாரர் நிர்வாகம் திரும்ப வழங்க வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார். (கொரோனா காலகட்டம்). சங்க உறுப்பினருக்கு எதிர்மனுதாரர் நிர்வாகம் கொரானா தொற்று பாதிப்பு ஏற்பட்ட காலகட்டத்தில் அரசு உத்தரவு படி 01.06.2020 முதல் 30.06.2020 வரை 50% விழுக்காடு பொது

பேருந்துகள் இயக்கப்பட்டது. பின்னர் 01.07.2020 முதல் 31.08.2020 வரை கொரோனா தொற்று காரணமாக முழு இயக்கம் நிறுத்தப்பட்டது. பின்னர் 01.09.2020 முதல் 06.09.2020 வரை மாவட்டங்களுக்குள் மட்டும் பேருந்து இயக்கப்பட்டது. கொரோனா கால கட்டத்தில் பொது மக்களின் அத்தியாவசிய தேவையான பொது போக்குவரத்து இயக்கம் அரசு உத்தரவுப்படி குறைவான பேருந்துகளை இயக்கிய போது எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் சுழற்சி முறையில் பணிக்கு வர அறிவிப்பு பலகை மூலம் தகவல் தெரிவிக்கப்படும், பணி வழங்கப்பட்டும் மற்ற நாட்களுக்கு வருகை பதிவில் 'H' (holiday) எனவும் பதிவு செய்யப்பட்டது. மேலும், கொரானா தொற்றின் காரணமாக ஊரடங்கு இருந்த நிலையில் பேருந்துகள் இயக்கப்படாத காரணத்தினால் பணியாளர்கள் பணிக்கு வராத நிலையிலும் சம்பளம் வழங்கப்பட்டது. ஆனால், கடந்த காலங்களில் பணியாளர்கள் சம்பளம் பெற்ற நாட்கள் மட்டும் கணக்கில் எடுக்கப்பட்டதில், சில பணியாளர்கள் அதிக அளவு விடுப்பு துய்த்தும் மற்றும் விடுப்புகள் இல்லாத காரணத்தினால் சம்பளமில்லா விடுப்பிலும் இருந்துள்ளார்கள். நிர்வாகத்தின் நிதி நிலைமை காரணத்தினாலும் அரசின் நிதிச் சுமை குறைக்கும் நோக்கோடு பணியாளர்களின் ஒரு வருட வருகைப்பதிவின் சராசரியை கணக்கிட்டு இந்த வகை தொழிலாளர்களுக்கு மட்டும் ஊதியமில்லாத நாட்களையும், பணிக்கு வராத நாட்களையும் கணக்கில் கொண்டு முழுமையாக சம்பளம் பெற்ற நாட்களை மட்டும் சராசரியாக எடுத்து முழுமையாக சம்பளம் வழங்கப்பட்டது.

6. மேலும், அவ்வாறான பணியாளர்களை வரிசைப்படுத்துகையில் ஷை பணியாளர் ஜூன் 2020ம் மாதத்தில் 50% சதவிகித பணியாளர்கள் சுழற்சி

முறையில் பணிக்கு வரவழைக்கப்பட்டு 50% பேருந்துகள் இயக்கப்பட்டன. இதன்படி கிளையிலிருந்து சங்க உறுப்பினர் 01 நாள் வருகை, 27 நாட்களுக்கு 'H' மற்றும் 03 நாட்கள் ஈட்டிய விடுப்பு எனவும், வருகைப்பதிவு பெறப்பட்டதை தொடர்ந்து சங்க உறுப்பினருக்கு 31 நாட்களுக்கும் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கொரானா பாதிப்பு ஏற்பட்ட சூழ்நிலையில் பேருந்துகள் முழுவதும் தடை செய்யப்பட்ட நிலையில், வருமானமே இல்லாத நிலையில் சங்க உறுப்பினருக்கு ஊதிய இழப்பு ஏற்படுத்த கூடாது என்ற நிலையில் சங்க உறுப்பினருக்கு நிர்வாகம் ஊதிய இழப்பு ஏற்படுத்தவில்லை. மேலும், எதிர்மனுதாரர் நிர்வாகம் ஒரு பொது சேவை நிறுவனம் ஆகும். இதில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் ஒரே மாதிரியான நிலைபாடு கொண்டு வேறுபாடு இல்லாமல் சம்பளம் பிரதி மாதம் வழங்கி உள்ளது.

7. மேலும் 01.06.2020 முதல் 30.06.2020 வரை 50% பேருந்துகள் இயக்கப்பட்டன. சங்க உறுப்பினருக்கு கடந்த காலங்களில் சராசரியாக 28 நாட்கள் மட்டுமே வருகை பதிவு உள்ளதால் நிலுவையிலுள்ள விடுப்பினை கழித்து சம்பந்தப்பட்ட மாதத்தில் முழு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. எனவே பிடித்தம் செய்த 03 ஈட்டிய விடுப்பு நாட்களை திரும்ப சங்க உறுப்பினருக்கு வழங்க வழி வகை இல்லை. மேலும் மனுதாரர் சங்கம் கூறுவது போல எதிர்மனுதாரர் சங்க உறுப்பினருக்கு எதிராக சட்ட விதிகளுக்கு புறம்பாகவோ, கழக நிலையாணைகளுக்கு புறம்பாகவோ, வேண்டுமென்றே பழிவாங்கும் நோக்கத்தோடோ, செயல்படவில்லை. எனவே மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும்.

8. தீர்வு காண வேண்டிய பிரச்சனை :

மனுதாரர் திரு.P.ராஜேஷ்குமார், ஓட்டுநர் (பணி எண்.C27483) என்பவருக்கு ஜூன் 2020 மாதம் விடுப்பு கணக்கில், சிறப்பு விடுப்பாக கருதி, பிடித்தம் செய்த 03 நாட்கள் ஈட்டிய விடுப்பினை திரும்ப மனுதாரரின் விடுப்பு கணக்கில் சேர்த்து வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? இல்லையா?

9. சான்றாவணமும், சாட்சியமும் :

மனுதாரர் தரப்பில் மனுதாரர் திரு.P.ராஜேஷ்குமார், தொ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, தொ.சா.ஆ.1 முதல் தொ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை, மற்றும் நி.சா.ஆ.1 மற்றும் நி.சா.ஆ.2 வரையிலான ஆவணங்கள் மனுதாரரின் குறுக்கு விசாரணையின் போது குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10. தீர்வு :

மனுதாரர் தரப்பில் சங்க உறுப்பினர் திரு.ராஜேஷ்குமார் ஓட்டுநருக்கு ஜூன் 2020 ம் ஆண்டு விடுப்புக் கணக்கில் 3 நாட்களில் சிறப்பு விடுப்பாக கருதி பிடித்தம் செய்து எதிர்மனுதாரர் சம்பளம் வழங்கியுள்ளார் எனவும், அவ்வாறு 3 நாட்கள் பிடித்தம் செய்ததற்கு சங்க உறுப்பினரின் அனுமதியோ அல்லது தொழிற்சங்கத்தின் ஒப்புதலோ அல்லது எந்த சட்டப்படியான உத்தரவு மூலமாக பிடித்தம் செய்யாமல் எதிர்மனுதாரர் தன்னிச்சையாக பிடித்தம் செய்திருப்பது

சட்டத்திற்கு புறம்பானது என்றும், இயற்கை நியதிகளுக்கு எதிரானது எனவும், வாதுரை முன்னிலை செய்யப்பட்டது.

11. எதிர்மனுதாரர் தரப்பில் கொரோனா காலகட்டத்தில் குறைவான பேருந்துகள் தான் இயக்கப்பட்டது எனவும், சங்க உறுப்பினருக்கு கடந்த காலங்களில் சராசரியாக 28 நாட்கள் தான் வருகைபதிவேடு இருந்தது எனவும், எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் நிதிநிலைமையும் மற்றும், அரசாங்கத்தின் நிதிநிலைமையையும் கருத்தில் கொண்டு சங்க உறுப்பினரின் ஈட்டிய விடுப்பிலிருந்து 3 நாட்கள் கழித்தல் செய்யப்பட்டு, அந்த மாதத்திற்கு முழுமையான சம்பளத் தொகை வழங்கப்பட்டுள்ளது எனவும், தாவா எழுப்புவதற்கு முன்பு சங்க உறுப்பினர் மற்றும் சங்கம் அந்த கோரிக்கை சம்பந்தமாக எதிர்மனுதாரருக்கு எந்த கடிதமோ கொடுக்கப்படவில்லை என்றபடியால் தாவா நிலைக்கத்தக்கதல்ல எனவும் தொ.சா.ஆ.2 18.07.2020 நாளிட்ட கடிதம் வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட கடிதம் என்றும் வாதுரை முன்னிலை செய்து மனுதாரரின் கோரிக்கை தள்ளுபடி செய்ய வேண்டப்பட்டது.

12. தொ.சா.ஆ.3 ஐ பார்வையிடுகையில் சங்க உறுப்பினரின் ஈட்டிய விடுப்பில் 3 நாட்கள் கழிக்கப்பட்டு ஜுன் 2020 மாதத்திற்கான முழு சம்பளமும் வழங்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. சங்க உறுப்பினரின் ஈட்டிய விடுப்பு கணக்கிலிருந்து 3 நாட்களை கழிப்பதற்கு எதிர்மனுதாரர் நிர்வாகம் சங்க உறுப்பினருக்கு எந்த தகவலும், பிரிவு 9A ன் படி அறிவிப்போ கொடுக்கவில்லை என்பதும், அவரது ஒப்புதல் பெறப்படவில்லை எனபதும், ஆவணங்களை பரிசீலனை செய்கையில் தெரிய வருகின்றது. எனவே, எதிர்மனுதாரர் நிர்வாகம்

தன்னிச்சையாக சங்க உறுப்பினரின் ஈட்டிய விடுப்பு கணக்கிலிருந்து 3 நாட்கள் கழித்துள்ளது தெரிய வருகின்றது. தன்னிச்சையாக 3 நாட்களை அவ்வாறு கழிப்பதற்கு எதிர்மனுதாரருக்கு அதிகாரம் உள்ளது எனவும், அதற்கான உரிமை நிலையாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை பொறுத்து எந்த சான்றோ அல்லது சாட்சியமோ முன்னிலை செய்யப்படவில்லை. சங்க உறுப்பினர் தரப்பில் தன்னுடன் பணி புரிந்த மற்ற ஓட்டுநர்களுக்கு எல்லாம் ஈட்டிய விடுப்பு கழிக்காமல் முழு சம்பளம் கழிக்கப்பட்டது என்று வாதுரை முன்னிலை செய்யப்பட்டது. வழக்குரையிலும், கோரிக்கை மனுவிலும், மனுதாரர் சங்க உறுப்பினர்களுக்கு எதிராக நிர்வாகம் செயல் பட்டு வந்தது என்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க உறுப்பினரின் இந்த கூற்றிற்கு எதிராக எதிர்மனுதாரர் தரப்பில் எந்த சான்றாவணமோ அல்லது சாட்சியமோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும், சங்க உறுப்பினரின் ஈட்டிய விடுப்பிலிருந்து 3 நாட்களை எதிர்மனுதாரர் தன்னிச்சையாக கழிப்பதற்கு எவ்வித உரிமையும் இல்லை என்று முடிவு செய்யப்படுகிறது.

13. எதிர்மனுதாரர் தரப்பில் தாவா தாக்கல் செய்வதற்கு முன்பாக சங்க உறுப்பினர் அல்லது மனுதாரர் எந்த கோரிக்கையும் இது சம்பந்தமாக முன்னிலை செய்யவில்லை என்றும் வாதுரை முன்னிலை செய்யப்பட்டது. சங்க உறுப்பினர் தரப்பில் 18.07.2020 ம் தேதி கோரிக்கை சம்பந்தமாக எதிர்மனுதாரர் சங்க உறுப்பினருக்கு கடிதம் அனுப்பியிருந்தார் எனவும், அதற்கு எதிர்மனுதாரர் பதில் அளிக்கவில்லை என்பதாக தெரிவிக்கப்பட்டது. தொ.சா.ஆ.2 கடிதம் அனுப்பியதற்கு எவ்விதமான சான்றும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவில்லை.

கோரிக்கை மனு மற்றும் தொ.சா.ஆ.1 சமரசமுறிவறிக்கை மற்றும் தொ.சா.ஆ.4 2(கே) மனுவின் நகல் ஆகியவற்றின் தொ.சா.ஆ.2 கடிதம் எதிர்மனுதாரருக்கு அனுப்பபப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை. எனவே, தொ.சா.ஆ.2 வழக்கிற்காக பின்னால் தயாரிக்கப்பட்டது என்பதாக முடிவு செய்யப்படுகிறது. மேலும் சங்க உறுப்பினர் தனது கோரிக்கையை மனுதாரரிடம் தெரிவித்து நடவடிக்கை எடுப்பதற்கு வேண்டிக் கொண்டது என்பதற்கு எந்த கடிதமும் தாக்கல் செய்யப்படவில்லை. இந்த சிறு குறைபாடுகள் வழக்கில் இருந்தாலும் அதன் அடிப்படையில் சங்க உறுப்பினரின் நியாயமான கோரிக்கையை நிராகரிக்கமுடியாது என்பதாக கருதுகிறேன். ஈட்டிய விடுப்பு என்பது தொழிலாளியின் சட்டப்படியான உரிமையாகும். அந்த உரிமையை மாற்றுவதற்கு எதிர்மனுதாரர் தொழிற்தகராறு சட்டப் பிரிவு 9A மற்றும் அட்டவணை IV பிரிவு 5ன் படியும் அறிவிப்பு தொழிலாளிக்கு வழங்கப்பட வேண்டும், ஆனால் இவ்வழக்கில் எந்தவித அறிவிப்பும் எதிர்மனுதாரர் சங்க உறுப்பினருக்கு வழங்க வில்லை.

13. மேலே குறிப்பிட்ட காரணங்களினால் எதிர்மனுதாரர் சங்க உறுப்பினரின் ஈட்டிய விடுப்பு கணக்கிலிருந்து 3 நாட்களை தன்னிச்சையாக கழித்துக் கொண்டது தொழிற்தகராறு சட்டம் பிரிஹ 9Aக்கு புறம்பானது என்பதாக முடிவு செய்து தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது என்பதாக முடிவு செய்கிறேன்.

முடிவில், தமிழக அரசாணை (டி) எண்.10 – தொழிலாளர் மற்று வேலைவாப்பு (டி1) துறை நாள்.06.01.2025ன் கீழ் எழுப்பப்பட்ட எழுவினாவிற்கு கீழ்கண்டவாறு பதில் அளிக்கப்படுகிறது.

1. மனுதாரர் திரு.P.ராஜேஷ்குமார், ஓட்டுநர் (பணி எண்.C27483) என்பவருக்கு ஜுன் 2020 மாதம் விடுப்பு கணக்கில், சிறப்பு விடுப்பாக கருதி, பிடித்தம் செய்த 03 நாட்கள் ஈட்டிய விடுப்பினை திரும்ப மனுதாரரின் விடுப்பு கணக்கில் சேர்த்து வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதான்.

2. ஏற்கனவே சங்க உறுப்பினர் ஜுன் 2020 மாதத்திற்கான முழுச்சம்பளமும் பெற்றுவிட்டபடியால் சங்க உறுப்பினர் மனுதாரர் திரு.P.ராஜேஷ்குமார், ஓட்டுநருக்கு பிடித்தம் செய்த 3 நாட்கள் ஈட்டிய விடுப்பை சிறப்பு விடுப்பாக கருதி, அந்த 3 நாட்கள் விடுப்பினை மீண்டும் அவரின் ஈட்டிய விடுப்பு கணக்கில் சேர்க்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

3. வழக்கின் தன்மையைக் கருத்தில் கொண்டு செலவுத் தொகையை குறித்து உத்தரவு எதுவும் இல்லை.

(இந்த தீர்வம் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் வருடம் ஏப்ரல் மாதம் 10ம் நாள் என்னால் நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.)

LATHA A P

Digitally signed by LATHA A P
Date: 2026.04.10 12:12:20 +0530

தலைமை தாங்கும் அதிகாரி,
முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>** :

தொ.சா.1 - திரு.P.ராஜேஷ்குமார்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>** :

- இல்லை -

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> :

| ஆவண எண் | தேதி | விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| தொ.சா.ஆ.1 | 04.01.2020 | ந.க.எண்.503/2020 ன் சமரச முறிவறிக்கை. | அசல் |
| தொ.சா.ஆ.2 | 18.07.2020 | சங்க உறுப்பினர் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு அனுப்பிய கடிதம். | நகல் |
| தொ.சா.ஆ.3 | ஜூன் 2020 | சங்க உறுப்பினரின் ஜூன் மாதம் 2020 ன் சம்பள ரசீது. | நகல் |
| தொ.சா.ஆ.4 | 28.08.2020 | மனுதாரர் சங்கம் கோவை, தொழிலாளர் அலவலர் முன்பாக தாக்க செய்த 2(கே)ன் மனு ந.க.எண்.503/2020. | நகல் |
| தொ.சா.ஆ.5 | 07.01.2024 | சந்தா ரசீது. | நகல் |
| தொ.சா.ஆ.6 | --- | எதிர்மனுதாரர் நிர்வாகம் வழங்கிய அடையாள அட்டை. | நகல் |
| தொ.சா.ஆ.7 | 20.08.2020 | மனுதாரர் சங்கம் வழங்கிய தீர்மானம். | நகல் |

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> :

| ஆவண எண் | தேதி | விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| நி.சா.ஆ.1 | 16.05.2020 | சுற்றறிக்கை. | நகல் |
| நி.சா.ஆ.2 | 17.06.2020 | அரசாணை எண்.G.O.304. | நகல் |

LATHA A P

Digitally signed by LATHA A P
Date: 2026.04.10 12:12:29 +0530

தலைமை தாங்கும் அதிகாரி,
முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

Copy of Fair/Draft Order in
ID No.72/2025,
Date : 10.04.2026.
PLC, CBE.